செ.வெ.எண்: 10/பிப்ரவரி நாள்: 05.02.2016

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்**
**இராமநாதபுரம் மாவட்டப் பிரிவின் சார்பாக தமிழ்நாடு மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகிறன**

--------

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இராமநாதபுரம் மாவட்டப் பிரிவின் சார்பாக தமிழ்நாடு மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான வாலிபால், இறகுப்பந்து, மேசைப்பந்து மற்றும் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் 04.02.2016 முதல் 06.02.2016 வரை இராமநாதபுரத்தில் வைத்து நடைபெற்று வருகிறது இதில் தமிழகம் முழுவதும் பல்கலைக் கழக அணிகள் கலந்து கொண்டு விளையாடி வருகிறார்கள்.

05.02.2016 வரை நடைபெற்று முடிந்த தகுதி சுற்று போட்டிகளிலிருந்து இறகுப்பந்து ஆண்கள் பிரிவில் பாரதியார் பல்கலைக்கழகம், SRM பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம் ஆகிய அணிகளும் பெண்கள் பிரிவில் அண்ணா பல்கலைக்கழகம், SRM பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம் ஆகிய அணிகளும் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் பிரிவில் சென்னை பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம் ஆகிய அணிகளும் பெண்கள் பிரிவில் சென்னை பல்கலைக்கழகம், SRM பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம் ஆகிய அணிகளும் வாலிபால் போட்டியில் ஆண்கள் பிரிவில் SRM பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம் ,அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம் ஆகிய அணிகளும் பெண்கள் பிரிவில் SRM பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், Hindustan பல்கலைக்கழகம், மேசைப்பந்து போட்டியில் பெண்கள் பிரிவில் சென்னை பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், SRM பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் ஆகிய அணிகளும் ஆண்கள் பிரிவில் SRM பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம்,அழகப்பா பல்கலைக்கழகம் ஆகிய அணிகள் தகுதிச் சுற்று போட்டிகளில் வெற்றி பெற்று லீக் போட்டிகளில் விளையாடி வருகிறார்கள்.

மேற்படி போட்டிகள் அனைத்தும் நிறைவு பெற்று 06.02.2016 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு இராமநாதபுரம் SDAT சீதக்காதி சேதுபதி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள நிறைவுவிழா நிகழ்ச்சிக்கு இராநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமை தாங்குகிறார்கள். மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அமைச்சர் அவர்கள் விழா பேரூரை ஆற்றி போட்டிகளில் முதல் நிலைகளில் வெற்றி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ. 10000/-வீதமும் இரண்டாம் நிலைகளில் வெற்றி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ. 7500/-வீதமும் மூன்றாம் நிலைகளில் வெற்றி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ. 5000/-வீதமும் மொத்தம் ரூ. 12,15,000/-யை காசோலையாக வழங்கி ஒவ்வொருவருக்கும் ரூ. 400/- மதிப்புள்ள கிட் பேக், T.Shirt மற்றும் தொப்பி ஆகியவற்றை வழங்கவுள்ளார்கள்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்கள். மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர்.க.சேவியர்ஜோதிசற்குணம் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்கள். மேலும் மாவட்ட விளையாட்டு கழக பொறுப்பாளர்கள், நடுவர்கள் மற்றும் பல்கலைக் கழக உடற்கல்வி இயக்குநர்கள் ஆகியோர்கள் கலந்து கொள்கிறார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**